**37 சோழனை மடுவில் வீழ்த்திய படலம்**

சுந்தரேசபாத சேகர் பாண்டியன் ஓர் சிறந்த சிவபக்தன். வேற்படையால் பல குறுநிலமன்னர்களை வென்றவன். மிகுந்த சிவபக்தனான அவன் ஓரளவு சேனைகள் வைத்துக்கொள்ளபணத்தை வைத்துக் கொண்டு, மற்றவற்றை சிவகோயில்திருமணிகளுக்கே செல விட்டான். இதனையறிந்த சோழ மன்னன் பாண்டியன் மீது படுயெடுத்தான் வந்தான். பாண்டியன் ஐயனிடம் சென்று தான் என்ன செய்வது என வேண்டினான் பாண்டியனை சோழனுடன்போரிடுமாறுகூறி, தாம் வந்து போரில் உதவி புரிவதாக ஓர் அசரீரி ஒலித்தது.

பெரும் கடல் போல் திரண்டுருந்த சோழனுடைய படைக்கு முன் பாண்டியனது படை ஓர் சிறு ஓடைப் போல் தோற்றத்தை அளித்தது. அச்சமயம் எம்பெருமான் வேடுவன் திருவுருவம் கொண்டுகுதிரை மீது அமர்ந்து, வேற்படையேந்தி சோழ மன்னனுக்கு எமன் போல் கட்சி தந்தார். வேடுவனாக வந்த ஐயன் முதலில் தன்னிடம் போரிட்டு பின் பாண்டியனுடன் போரிட சோழனை அழைத்தார்.

இருவரும் பயங்கரமாக மோதினார்கள். முடிவில் சோழப்படை பயந்து புறமுதுகிட்டு ஓடிற்று. உடனே வேடன் வேடம் தரித்த எம்பெருமான் மறைந்தார்.சற்றே திரும்பிய சோழன் வேடுவனைக் காணாத்தால் பயம் நீங்கி மீண்டும் மதுரையை நோக்கி பாண்டியனை துரத்தினான். பாண்டியன் செய்வது அறியாமல் ஓர் மடுவில் வீழ்ந்தான். துரத்தி வந்த சோழனும் குதிரையோடு மடுவில்வீழ்ந்தான் சுந்தரனாரின் பேர்ருளால் பாண்டியன் கரை சேர்ந்தான். சோழன் மடுவில் ஆழ்ந்து இறந்தான். சோமசுந்தரர் அருளால் பல்லாண்டு சுந்தரேசபாத சேகரன் நல்லாட்சி புரிந்தான்.

**பல்லவி**

சேனைச் செலவைக் குறைத்து உன் பணி செதிட்டான்
சுந்தரேச பாதசேகர பாண்டியன்

**அனுபல்லவி**

சேனைபலம் அறிந்து பாண்டியனை வீழ்த்த வந்த
சோழனுக்கு யமனாய் காட்சியளித்தீர்

**சரணம்**

மறைந்தீர் எனத் தெரிந்து திரும்பிய சோழனைக் கண்டு
பயந்த பாண்டியன் ஓடி மடுவில் வீழ்ந்தான்
பிறை மதியணிந்தோன் உன் அருளால் பின் தொடர்ந்த
சோழனும் வீழ்ந்திறக்க பாண்டியன் பிழைத் தெழுந்தான்